தெரிவித்திருந்தார்கள். இது எப்பொழுது பரிசீலிக்கப்படும்? ஆரணி பகுதியைப் புராதன நகரமாக அறிவிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ் அவர்களுக்கு என்ன பதில் சொன்னேனோ, அதே பதில் மாண்புமிகு உறுப்பினருக்கும் பொருந்தும். சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அதற்கான கருத்துரு கேட்கப்பட்டு, புராதன நகரமாக அறிவிக்க வேண்டிய தகுதிகள் இருந்தால், நிச்சயமாக இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய வழிகாட்டுதலுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த அரசு இதை நிறைவேற்றித் தரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

மேம்பாலம்

***6409—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் இரயில்வே மேம்பாலப் பணிகளை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத்*

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர், மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் இரயில்வே மேம்பால கட்டுமானப் பணிகள் பிப்ரவரி 2014 முதல் தொடங்கப்பட்டு, விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

முற்பகல் 10-20

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாநகரம் போக்குவரத்து நெரிசல் மிகுந்த ஒரு மாநகரமாகும். மேலும், இம்மாநகரில் நொய்யலாறு மற்றும் இரயில்வே இருப்புப்பாதைகளும் செல்கின்றன. அங்கு மூன்று பாலங்கள் கட்டுவதற்கான வேலைகள் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதிலே, குறிப்பாக இரண்டு மேம்பாலங்கள் மற்றும் ஒரு சுரங்கப் பாதை கட்டுகின்ற வேலைகள் நடைபெறவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல ஒரு சுரங்கப்பாதை மற்றும் ஒரு மேம்பால வேலை மட்டும்தான் நடைபெறுகின்றது. சில நபர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கு போட்டுள்ளதால், மற்றொரு பாலத்தினுடைய வேலை தொடங்கப்பட்டு, மேற்கொண்டு பணி நடைபெறாமல் அப்படியே நிற்கின்றது. எனவே, வழக்குகளை விரைவாக முடிக்க அரசு நடவடிக்கைகளை எடுத்து, அந்தப் பால வேலைகளை முடித்து, திருப்பூர் மாநகரத்தினுடைய போக்குவரத்து நெரிசலை முறைப்படுத்தினால் மக்களுக்கு உதவியாக இருக்கும், அதனைச் செய்ய வேண்டுமாய் தங்கள்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் வாவிப்பாளையம் சாலையில் இரயில்வே கடவு எண் 132-க்கு மாறாக சாலை மேம்பாலம் கட்டுதல் மற்றும் திருப்பூர் கொங்கு பிரதான சாலையில் இரயில்வே

கடவு எண் 133-க்கு மாற்றாக சாலையில் கீழ்ப்பாலம் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. வருவாய்த் துறையிடமிருந்து சுவாதீனச் சான்று பெறப்பட்டு, தற்போது பாலம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் வரும் ஆகஸ்ட், 2015-க்குள் விரைந்து முடிப்பதற்கு அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. மேம்பாலப் பணிகள் கட்டுமானத்திற்காக 48.2 கோடி ரூபாய் இதுவரை செலவழிக்கப்பட்டு, 58% பணிகள் முடிவடைந்துள்ளன. கீழ்ப்பாலம் கட்டுமானத்திற்காக 27.68 கோடி ரூபாய் இதுவரை செலவழிக்கப்பட்டு, 56% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, பாலங்களை விரைந்து கட்டுவதற்காக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாவதாக இருக்கக்கூடிய அனப்பாளையத்தில் பாலம் கட்டுவதற்கான எந்த வேலையும் இதுவரை தொடங்கப்படவில்லை. நொய்யலாற்றின் குறுக்கே இரயில்வே இருப்புப்பாதை செல்கின்ற இடத்தில் பாலம் கட்டும் வேலை தொடங்கப்படாமல் இருக்கிறது. எனவே, நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் அனைத்தையும் விரைந்து முடிக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு தங்கள்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மன்னரை-தொட்டி மன்னரை சாலையில், இரயில்வே கடவு எண் 131-க்கு மாறாக, மேம்பாலம் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இரயில்வே பகுதியிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல், திருப்பூர் சோமனூர் சாலையில், சிக்கன்னா கல்லூரிக்கு செல்லும் சாலையில் நொய்யலாற்றின் குறுக்கே ஓர் உயர் மட்டப் பாலம் கட்டும் பணிகள்*

40% முடிவடைந்துவிட்டது. நிலம் கையகப்படுத்துவது தொடர்பான வழக்கில் நீதிமன்ற தடையாணை உத்தரவினால் தற்போது அந்த வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. வழக்குகளை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பாலப் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்தை கிழக்கரை, தூத்துக்குடி போன்ற தென் பகுதிகளிலுள்ள ஊர்களுடன் இணைக்கக்கூடிய கிழக்கு கடற்கரைச் சாலையில் ஒரு புதிய இரயில்வே மேம்பாலம் கட்டப்படும் என்று இந்த அரசு 2013-ல் அறிவித்திருந்தது. அந்த இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு எந்தவொரு பணியும் நடைபெறுவதாகத் தெரியவில்லை. இராமநாதபுரத்திலே இரயில்வே கடவு மூடும்பொழுது ஏற்படக்கூடிய மிகப் பெரிய போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக விரைவில் அந்த இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கான பணியைத் தொடங்குவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இராமநாதபுரத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கான எந்தப் பணிகளும் துவங்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஒரு இரயில்வே மேம்பாலப் பணியைத் துவக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் 4 முதல் 5 ஆண்டுகள் வரை ஆகும். இதுகுறித்து ஏற்கெனவே 2014-2015 கொள்கை விளக்கக் குறிப்பில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றோம்.

இரயில்வே மேம்பாலப் பணிகளை மேற்கொள்கின்றபோது, தல வரைபடம் தயாரித்தல், நேர்பாடு செய்தல், இரயில்வே துறைக்கு அனுப்புதல் போன்றவற்றிற்கு 3 மாதங்கள் ஆகின்றன. இரயில்வே துறையிடமிருந்து நேர்பாடு வரைபடம் பெறுவதற்கு

ஆறு மாதங்கள் ஆகின்றன. நில திட்ட வரைபடம் தயாரிப்பதற்கு 3 மாதங்கள் ஆகின்றன. பிரிவு 15/2-ன்கீழ் அறிவிக்கை செய்வதற்கு 6 மாதங்கள், 15/1-ல் அறிவிப்பு செய்வதற்கு 6 மாதங்கள், மதிப்பீடு தயாரிக்க மூன்று மாதங்கள், மதிப்பீடு ஒப்புதல் வழங்குவதற்கு மூன்று மாதங்கள், பணம் வழங்க ஆணைகள் வழங்குவதற்கும், நிலம் கையகப்படுத்துவதற்கும் 6 மாதங்கள், பயன்பாட்டு சாதனங்களை மாற்றி அமைக்க 3 மாதங்கள், வரைபடம் முடிவடைந்து அதனைத் தயாரிக்க 3 மாதங்கள், மதிப்பீடு தயாரிப்பதற்கும், தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குவதற்கும் 3 மாதங்கள், ஒப்பந்தப்புள்ளி முடிவடைந்து பணி ஒப்படைப்பு செய்வதற்கு மூன்று மாதங்கள் என கிட்டத்தட்ட 4 முதல் 5 ஆண்டுக் காலம் இதற்கே செலவிடப்படுகின்றது. மீதி 2½ ஆண்டுகள் பணிகள் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், பாலம் கட்டும் பணிகளில் காலதாமதம் ஏற்படுகின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதன் காரணமாக பாலப் பணிகளை விரைந்து முடிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்ட மக்களின் நீண்டகால கோரிக்கையாக இருந்து வருகின்ற விருதுநகர் இரயில்வே மேம்பாலப் பணியின் தற்போதைய நிலை என்ன? அந்த பணி எப்போது துவங்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூல வினா திருப்பூர் சம்பந்தப்பட்ட வினா. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனி வினா

எழுப்பினால், அதற்கு முழுமையான, விளக்கமான பதில் தரப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2011-2012 ஆம் நிதியாண்டிலே 110 விதியின்கீழ் என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே வருகின்ற முள்ளுவாடி இரயில்வே மேம்பாலம், அணைமேடு இரயில்வே மேம்பாலம், லீபஜார் இரயில்வே மேம்பாலம் ஆகியவை கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. சற்றுமுன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலே 4 ஆண்டுகள் ஆகுமென்று சொன்னார்கள். ஆனால், ஒரு பாலம் அதாவது லீபஜார் மேம்பால வேலைகளை ஆரம்பித்துவிட்டீர்கள். கருத்துரு எல்லாம் ஒன்றாகத்தான் போயிருக்குமென்று நினைக்கிறேன். மீதி இருக்கிற அந்த மூன்று மேம்பால வேலைகள் எப்பொழுது துவங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதெல்லாம் இவ்வளவு காலம் ஆகும் என்றுதான் குறிப்பிட்டேன். ஆனால், அரசு விரைந்து நடவடிக்கை எடுப்பதன்பேரிலே செவ்வாப்பேட்டை பாலம் கட்டுவதற்கு டெண்டர் விடப்பட்டு பணிகள் துவங்கப்பட்டு விட்டன. முள்ளுவாடி கேட்டில் இரண்டு பாலங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இது தெரியும். அது குறுகலான சாலை. இரண்டு பக்கங்களிலும் நிலம் கையகப்படுத்தவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அது குடியிருப்புப் பகுதியாகவும் இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதி மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, நிலத்தை கையகப்படுத்திய பிறகுதான், அப்பணிகளைத் துவங்குகின்ற சூழ்நிலை இருக்கின்றது. இந்தக் காரணத்தினால்தான் இப்பணியில் காலதாமதமாகிறது. இருந்தாலும் விரைந்து நிலத்தை கையகப்படுத்தி,

பாலப் பணிகளை மேற்கொள்ள அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட உண்ணாமலைக்கடை பேரூராட்சி, விரிகோடு பகுதியில் இரயில் விபத்துகள் அதிகமாக நடைபெறுகின்ற காரணத்தாலும், மார்த்தாண்டம் பகுதியில் போக்குவரத்து நெருக்கடியைச் சமாளிக்கவும், ரூபாய் 64 கோடி மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம் அமைக்க அரசின் அனுமதிக்காக கருத்துரு அனுப்பப்பட்டு, இரண்டு ஆண்டுக் காலம் ஆகிறது. அந்தப் பரிந்துரையை ஏற்று, அனுமதி வழங்கி, பணிகள் விரைவில் நடைபெற உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இரயில்வே மேம்பாலப் பணிகளை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், எவ்வளவு காலதாமதமாகும் என்பதைப்பற்றி நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். ஒவ்வொரு துறைக்கும் சென்று, அங்கே அனுமதி பெற்ற பிறகுதான், அந்த மேம்பாலப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. இந்தக் காரணத்தினால்தான் காலதாமதம் ஏற்படுகிறது. இருந்தாலும், அரசு விரைந்து உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*